உ

சிவமயம்



யாழ்ப்பாணம்

வழக்கம்பரை – தொல்புரம்

சுழிபுரம்

உயர்குடித் தோன்றல்

அமரர்

# விசுவநாதன் சீவரத்தினம்

அவர்களின்

# நினைவு மலர்

"காடோ செடியோ கடற்புறமோ கனமே மிகுந்த
நாடோ நகரோ நகர்நடுவோ நலமேமிகுந்த
வீடோ புறந்திண்ணையோ தமியேனுடல் வீழுமிடம்
நீடோய் கழுக்குன்றிலாசா உயிர்த்துணை நின்பதமே"


**11-02-1994**

உ
சிவமயம்

அமரர்

# விசுவநாதன் சிவரத்தினம்

அவர்கள்



**தோற்றம்:** **25-7-1921**

**நிறைவு:** **12-1-1994**

## திதிவெண்பா

"இனிய குணச்சிவ ரத்தினம் உடலம்
துணைவிடுத்துச் சங்கரனார் தாளை - இனிதாகச்
சேர்ந்தார் சிறீமுகத்துச் சீர்மார் கழிமாதப்
பூர்வப் பிரதமைப் போது"

உ
சிவமயம்
அமரர்

# விசுவநாதன் சிவரத்தினம் அவர்களின்

# வரலாற்று மாலை

சர்வலோக நாயகியான ஸ்ரீபுவனேஸ்வரி அம்மாளின் அருட்கடாட்சத்தால் பொலிவுபெறும் சுதுமலையைச் சேர்ந்த அமரர் இளையதம்பி விசுவநாதன் அவர்களுக்கும் அவர்தம் மனைவியார் வடிவாம்பிகை அவர்களுக்கும் ஏக புதல்வனாக அமரர் சிவரத்தினம் அவர்கள் 1921ம் ஆண்டில் மலேசியாவிற் பிறந்தார். இவரது தந்தையார் விசுவநாதன் அவர்கள் அச் சமயத்தில் மலேசியாவில் புகையிரத நிலைய அதிபராகக் கடமை யாற்றிக் கொண்டிருந்தார். சில ஆண்டுகளின் பின் தம் கடமை யினின்றும் ஓய்வு பெற்ற திரு. விசுவநாதன் தம்மனைவியோடும் அருமைமகன் சிவரத்தினத்தோடும் தாயகம் திரும்பித் தமது சொந்தக் கிராமமான சுதுமலையில் வாழ்ந்து வரலானார். இக் கால கட்டத்தில் திருமதி வடிவாம்பிகை விசுவநாதன் அவர்கள் நோய்வாய்ப்பட்டுக் காலமானார்.

சிறுபராயத்திலேயே தம் தாயின் அரவணைப்பையிழந்த அமரர் சிவரத்தினம் அவர்கள் தமது தந்தையாரின் அரவணைப்பில் வாழ்ந்தார். இச்சமயத்தில் இவரது தந்தையார் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சின்னத்தங்கச்சி என்னும் பெண்ணை மறுமணம் செய்துகொண்டார். இத்திருமணத்தின் பேறாக புண்ணியபூபதி, இரத்தினபூபதி, இராஜராணி, கமலாதேவி என்னும் நால்வரை அமரர் சகோதரிகளாகப் பெற்றுக்கொண்டு மகிழ்ந்து வாழ்ந்தார்.

அமரர் சிவரத்தினம் காலஞ்சென்ற பிரபல வைத்திய பூபதி அண்ணாமலை அவர்களின் மருமகனுமாவார். அமரர் தமது ஆரம்பக் கல்வியைச் சுதுமலை சிந்மய பாரதி வித்தியா சாலையிலும், இடைநிலைக்கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும், உயர்கல்வியை யாழ். பரமேஸ்வராக் கல்லூரியிலும் கற்றுத் தேறினார். ஆற்றலும் அறிவும் மிக்கவரான அமரர் பகிரங்க வேலைத்திணைக்களத்தில் மேற்பார்வையாளராகக் கடமையேற்றார். திருகோணமலை, தியத்தலாவை, அனுராதபுரம், வவுனியா ஆகிய இடங்கள் இவரது கடமையாற் சிறந்தன. அதனாற் புகழும் பதவி உயர்வும் பெற்றார்.

பதவியில் ஏற்றம் பெற்ற அமரர் தொல்புரம் பதியைச் சேர்ந்த செல்லையா ஆச்சிமுத்து தம்பதியரின் ஏக புதல்வியான றாமேஸ்வரி யென்னும் மங்கை நல்லாளை வதுவையிற் கொண் டார். அன்பும் அறனும் உடைத்தாய இல்லறவாழ்வின் பய னாக - மங்கலமான மனைமாட்சிக்கு நன்கலம் நன்மக்கட்பேறு என்னும் படியாக - சந்திரகுமார், தேவகுமார், இராஜகுமாரி, விஜயகுமாரி, ஜெகதாம்பாள் ஆகிய பிள்ளைச் செல்வங்களைப் பெற்று மகிழ்ந்தனர்.

அமரர் ஒரு சிறந்த இல்லறத்தலைவனாகவும், நற்றந்தை யாகவும்,விளங்கித் தம் மக்களை மேனிலைக்குக் கொண்டுவந்தார். மூத்த புதல்வரான சந்திரகுமார் கொழும்பு சாமுவேல் அன் கம்பனியிற் கடமையாற்றி யாழ்ப்பாணம் ஆனந்த நடராசா தம் பதியரின் புதல்வியும் வேம்படி மகளிர் கல்லூரியின் ஆசிரியை யாகவும் விளங்கிய சிவகுமாரி யென்னும் சீரிய பண்புடையா ளைக் கைப்பிடித்தார். இவர்களுக்கு தயானுஜி, சிவானுஜி, மேருஜா ஆகிய குழந்தைச் செல்வங்கள் கிடைத்தனர். இவர் தம் குடும்பத்தோடு தற்சமயம் இலண்டனில் இனிதே வாழ்ந்து வருகிறார்.

இரண்டாவது மகன் தேவகுமார் வவுனியாவில் குமார் ஏஜென்சிஸ் என்னும் ஸ்தாபனத்தை நடத்திவருகிறார். இவர் ஆயுள்வேத வைத்தியரும், யாழ்ப்பாணம் சுந்தரம் பிறதர்ஸ் உரிமையாளருமான திரு. சோமசுந்தரம் தம்பதியரின் புதல்வி ஜெயசுந்தரி யென்னும் நற்பண்பாளை மணந்தார். இவர்கள் கஜிந்தன், நிரோஜன் என்னும் புதல்வர்களைப் பெற்று இனிதே வாழ்கின்றனர்.

மூத்த மகளான இராஜகுமாரி சுன்னாகம் மக்கள் வங்கி யிற் கடமையாற்றும் சுதுமலை நடராஜா தம்பதியரின் மக னாகக் குணத்திற் குன்றாத குமாரசிவத்தை மணந்தார். இவர் களது இனிய இல்லற வாழ்வில் சிவசீலன், ஜெபசீலன், வானதி, குமாரதி என்னும் பிள்ளைகள் கனிந்துள்ளனர்.

விஜயகுமாரி என்னும் இரண்டாவது மகள் கொழும்பு ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனத்திற் கடமையாற்றும் சங்கானை நவரத்தினம் தம்பதியரின் புதல்வன் நற்குணாளன் சற்குண நாதனை மணந்தார். இந்து, ஜனன் என்னும் பிள்ளைகளைப் பெற்று இவர்கள் இனிதே வாழ்ந்து வருகின்றனர். ஜெகதாம் பாள் என்னும் கடைசிப்பெண் தன் தந்தையாருக்கு இறுதிக் காலம்வரை தொண்டினைச் செய்யும் பேற்றினைப் பெற்றார்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் பெறப்படும்''

என்பார் வள்ளுவர். நிறைந்த மக்களை, மருமக்களை, பேரப்பிள்ளைகளைத் தம் எச்சமாய்ப் பெற்றுத் தக்கவராய் வாழ்ந்த அமரர் சீவரத்தினம் அவர்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றி 1979ல் ஓய்வுபெற்றுத் தம் குடும்பத்தினருடன் நிறைவாழ்வு வாழ்ந்தார். வழக்கம்பரை அம்மன் அருளால் எக்குறையுமின்றித் தம் வாழ்வின் காலவட்டத்தை முடித்துக்கொண்டு பெருமகன் சீவரத்தினம் 12-1-1994இல் சிவபதம் எய்தினார்.

''ஆண்டாண்டு தோறும் மழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தில் — வேண்டாம்
நமக்கு மதுவழியே நாம் போமளவும்
எமக்கென் னென்றிட்டுண் டிரும்''

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



# தோத்திரமாலை

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்** **சம்பந்தர்**

பண்டை வல்வினையினாற் பாயுடுத்துழல்
குண்டரை வென்றுமுன் கூடல் வைகியே
வெண்டிரு நீற்றொளி விளங்கச் செய்திடு
தண்டமிழ் விரகன் மெய்த்தாள்கள் போற்றுவோம்.

## திருவாசகம்

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ்சோதி
உள்ளவா காண வந்தருளாவாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடைய அன்பே.

## திருவிசைப்பா

நீறணிபவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணிபுவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக்கூத்தா
அம்பொன் செம்பலத தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிறையே

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் யோமின்கண்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடியீசற்
காட்செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப் பொருள்
பண்டு மின்று மென்றுமுள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

மாதர்வச மாயுற் றுழல்வாரும்
மாதவமெணாமற் றிரிவாரும்
நீதகல வோதிப் பணியாரும்
தீநரக மீதிற் றிகழ்வாரே
நாதவொளி யேநற் குணசீலா
நாரியிரு வோரைப் புணர்வேலா
சோதிசிவ ஞானக் குமரேசா
தோமில்கதிர் காமப் பெருமாளே

திருச்சிற்றம்பலம்



உ
முருகன் துணை

# தேவராய சுவாமிகள் அருளிச்செய்த

# கந்தர் சஷ்டி கவசம்

## குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## காப்பு

## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் — கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்தர்
ஷஷ்டி கவசந் தனை.

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவணபவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டிற் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடு யில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவசர ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவ வீரா நமோ நமோ
நிபவ சரவண நிற நிற நிறென
வசர வணபவ வருக வருக

அசுரர் குடி கெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையுந்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியுந்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனிற் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகெண
நகநக நகநக நகநக நகெண
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க

என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியாற் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டுங் கண்ணிணைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டுங் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிண்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்துடை யிரண்டும் பகர்வேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா ணாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வயிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்கத்
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்கக்
காக்கக் காக்கக் கனகவேல் காக்க

நோக்க நோக்க நொடியி னோக்கத்
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்கப்
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபடப்
பில்லி சூனியம பெரும்பகை யகல
வல்ல பூதம வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேறி இத்துன்ப சேனையும்
எல்லினு மிருட்டிலும் எதிர்ப்படு மண்ணையும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனைமயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தர்களெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினின் முட்டப் பாசக் கயிற்றாற்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிடச்
செக்கு செக்கு செதிற்செதி லாகச்
சொக்கு சொக்கு சூர்ப்பகை சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் போத்தொடு நாயும்

எலியும் கரடியும் எனைத்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துயு ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிருதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறு செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீக்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்

சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கவென் வறுமைக ணீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியென் எத்தனை செயினும்
பெற்றவ நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிப்
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையிற் கருத்துடன் னாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலது அருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோண் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாய்க் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வசத் துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த

குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேவா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனகசபைக்கோ ரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணம் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்.

முற்றும்.



# நன்றி நவிலல்

## எமது குடும்பத் தலைவரின்

மறைவின்போது எமது துயரத்தில் பங்கேற்றும், வேண்டிய உதவிகள் வழங்கியும்; அன்னாரது இறுதிக் கிரியைகளில் பங்கேற்றும், அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தும், ஆறுதல் கூறிய அனைவருக்கும், அத்துடன் இன்றைய ஆத்ம சாந்திக் கிரியைகளில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்

**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**



தாசன் அச்சகம், மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.